REGISTERED No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபெறநில்.

வெண்டாமரை ௫. | 1917-ம் ஆடு மே, ஜூன் மீ | இதழ் ௫-௬.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,

கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,

புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
வெளியூரார்க்கு ரூ $1\frac{1}{4}$	தனிச் சஞ்சிகை அணா 2

உள்ளுறை.

	பக்கம்.
மாட்சிமை தங்கிய P. V. மாணிக்கம் நாய்க்கரவர்கள் B. E., M. C. I., Executive Engineer, P. W. D. பத்திராதிபர்.	95
புதுவைக் கலைமகள் கழகத்தின் ஆறுவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் :— கண்டு களித்தோன்.	9[illegible]
ஐய வினா :— நாட்டு வைத்தியன்.	101
சற்புத்திரன் சஞ்சலம் :— ஸ்ரீ சு. அ. சுப்பராயப்பிள்ளை...	103
படிக்காசுப்புலவர் சரிதம்:-ஸ்ரீ சி. கு. நாராயணசாமிமுதலியார்	107
வித்தை விருப்பிக்கு :— ஞானவான்சேய்.	112
கண்மணி கமலா :— ஸ்ரீ தம்பி – புருஷோத்தமப்பிள்ளை...	114
நாவலா ?:— ஸ்ரீ ரா. வாசுதேவ சர்மா, புதுவை.... ...	117
ஒருசெய்யுள் பேதமும், ஐயமும்:-ஸ்ரீ M. R. கோவிந்தயபத்தர்.	122
களக்காடு விசுவகர்ம சபை :— ஸ்ரீ வீரவாகு, காரியதரிசி..	122
நியாயமாலா :— இதோபதேசி.	123
சந்நியாச விஷயம் :— இதோபதேசி.	124
புத்தக நன்கொடை:— ஸ்ரீ தி. திருப்புளிசாமி ஐயர். ...	125
புத்தக வரவு :— பத்திராதிபர்.	125

கலைமகளுக்கு நன்கொடை.

கல்விக்கடலாகவும், கற்றோர்க்குக் களைகணாகவும் விளங்குகின்ற திருக்கைலாய பரம்பரை, திருவாவடுதுறை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் மகாசந்நிதானத்தை நாம் திருவிடைமருதூரில் தரிசிக்கப்பெற்றோம். சுவாமிகள் மகா சந்நிதானம் நம்மை நன்கு சன்மானித்ததுமன்றி, நமது கலைமகளுக்குப் பொருளுதவியும் புரிந்து ஆதரித்தருளியது, மகாசந்நிதானத்தின் பெருந்தகைமையை விளக்கிக் காட்டுகின்றது.

கருணைகூர்ந்து கலைமகளை யாதரித் தருளிய தேசிக மூர்த்திகள் மகா சந்நிதானத்திற்கு நமது மனப்பூர்வகமான நன்றியை நிவேதனம் செய்கின்றோம்.

பத்திராதிபன்.

உ

ஸ்ரீவாணி சகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ஆ மே, ஜூன் மீ	இதழ் ௫-௬.

மாட்சிமை தங்கிய P. V. மாணிக்கம் நாய்க்கரவர்கள் B. E., M. C. I., Executive Engineer, P. W. D.

புதுவையில் பகவற்கீத சன்மார்க்க சபையில், சின்னாண் முன்னர், புதுவை பிரமஸ்ரீ சுவாமிநாத தீட்சிதரவர்கள் B. A.; L. T., Colonial college Professor, அக்கிராசனம் வகிக்க, ஸ்ரீமான் P. V. மாணிக்கம் நாய்க்கரவர்கள் B. E., M. C. I., Executive Engineer, P. W. D. இரண்டு அரிய உபன்னியாசம் செய்தார்கள். முதல் நாள் செய்த உபன்னியாசம் "தமிழ் ஒலி இலக்கணம்" என்பது. இரண்டாம் நாளில் "தமிழ் மறை."

முதல் நாள் உபன்னியாசத்தில், தமிழ் மிக இனிமையானதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமான மொழியென்றும், ஒலியின் இலக்கணத்தை விளக்கி, எம்மொழியிலும் இயற்கையொலி யெழுத்து, கலப்பொலி யெழுத்து என இரண்டுவகையுண்டென்றும், கலப்பொலியினாலேயே பல வெழுத்துக்கள் ஆக்கப்பட்டிருக்கின்றனவென்றும், தமிழில் பல்வகை ஓசை வேறுபாடமைந்த எழுத்துக்கள் இன்மையால் தமிழில் பிறமொழிகளை

யெழுத முடியாது — என்று சிலர் நினைப்பது தவறு என்றும், கலப்பொலி யெழுத்துக்களால் தமிழில் எல்லா மொழிகளையும் எழுதலாமென்றும், ஆய்தவெழுத்தின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறி, அவ் வாய்தத்தை முன்னும் பின்னுமாகச் சேர்ப்பதால் எழுத்துக்களுக்குப் பல்வேறுவகைப்பட்ட ஓசைகள் உண்டாகின்றனவென்றும், அதனால் பிறமொழிகளினால் எழுதமுடியாததையும் தமிழில் எழுதமுடியுமென்றும் சொல்லி, ஆய்தத்தைச் சில எழுத்துக்களுக்கு முன்னும் பின்னுமாகக் கரும்பலகையில் தீட்டி, அதனால் எழுத்துக்களுக் கேற்படும் ஒலி வேறுபாடுகளைக் காட்டினதுமன்றி, அவ்வண்ணமே வடமொழி, தெலுங்கு, கன்னடம், துளுக்கு, உருடு, இங்கிலீஷ் முதலிய பல மொழித் தொடர்களைச் சான்றாகத் தமிழில் எழுதிப் படித்தும் படிப்பித்தும் காட்டினார்கள். இது யாவர்க்கும் பெரு வியப்பை யுண்டு பண்ணிவிட்டது. பழக்கமின்மையினால் இக் கலப்பொலியால் ஏற்படும் ஓசை வேறுபாடுகள் சிறிது வலிந்துகொள்ளுதல்போலத் தோற்றினும் ஊன்றிப் பார்க்குமிடத்து அவர்கள் கூறுவது பொருத்தமாகவே யிருக்கிறது. எவ் வொலியும் பழக்கத்தின் கண்ணதேயன்றோ. இப்போது குருடர்கள் கல்வி கற்கும் வகையில் அதாவது எழுத்துக்களை அவர்கள் கைகளால் தடவிப் படிக்கும் வகையில், மேற்கூறியாங்குப் பிறமொழிகளைத் தமிழில் அமைத்துக் காட்டினால், அவர்கள் ஓசை வேறுபாடு பிறழாது சிறிதும் தடுமாற்றமின்றிப் படிப்பதைக் காணலாம் — என்று அவர்கள் கூறியது யாவரும் ஒப்பத்தகுந்ததாகவே யிருந்தது.

அங்ஙனமாயின், அத்தகைய எழுத்துக்கள் பிறமொழிகளிற்போல் தமிழ்மொழியில் ஏற்கெனவே ஏன் அமைக்கப்பட்டிருக்கவில்லை — என்றால், தமிழ் நாட்டிற்கு அவ் வொலி யெழுத்துக்கள் வேண்டியதில்லையென்றும், வடநாட்டிற்கே அவ் வொலிகள் பெரிதும் வேண்டற்பாலனவென்றும், அது தேயங்களின் தட்ப வெப்பங்களின் நிலைமையைப் பொறுத்ததென்றும், தண்மை வெம்மைகளின் நிலைமைக்கிணங்கவே மொழிகள் ஏற்பட்டுள்ளன வென்றும் கூறி, அதற்குக் காரணமும் காட்டினார்கள்.

தென்னாடு இயற்கையில் வெப்பமுடையதென்றும், அங்காந்து மூச்சுவிடுதலே ஆய்தவெழுத்தாகுமென்றும், அதன் கலப்பு அதிகமாக ஏற்படின் மக்கட்கு மூச்சுப் பெரிதும் செலவாகுமென்றும், சுவாசம் அதிகம் செலவாக, குடுமிக்கு ஆயுள் குறையுமென்பது யோகநூற் றுணிபென்றும், அதனாலேயே ஆய்தவெழுத்துப் பொருந்திய சொற்கள் தமிழில் மிகக் குறைந்துள்ளனவென்றும், வடநாடுகளில் குளிர் மிகுதியால் அங்குள்ளார்க்கு உள்ளும் புறமும் வெப்பம் மிகுதியும் வேண்டியதென்றும், அதுபற்றியே மூச்சுப் பெரிதும் வெளியாகக்கூடிய ஆய்தக் கலப்புள்ள ஒலியெழுத்துக்கள் அதிகமாக அமைக்கப்பட்டுள்ளனவென்றும், தென்னாடு வெப்பமுடையதென்பதும் வடநாடு குளிர்ச்சியுடையதென்பதும் அதுபற்றியே உணவு உடை ஒழுக்கம் முதலியன வேறுபட்டுள்ளனவென்பதும் கண்கூடென்றும், ஏற்ற பல சான்றுகளைக்கொண்டு விளக்கிக்காட்டியது வியப்புக்கிடமாகவே யிருந்தது.

பின்னர் அவ் வுபன்னியாசத்தில் ஓங்காரத்தைச் சம்பந்தப்படுத்தி, தட்சிணாமூர்த்தத்தில் ஓங்கார வடிவம் அமைந்திருத்தலைப் படத்தின் வாயிலாகக் காட்டி, எல்லாப் பொருள்களும் ஓங்காரவடிவமேயென்றும், அண்டத்திலும் பிண்டத்திலுமுள்ள பொருள்களெல்லாம் ஓங்காரவடிவமாகவே யமைந்துள்ளனவென்றும் கூறி, கருவில் தோன்றுதல்முதல் கடைசிவரையில் மீன், பல்லி முதலிய உயிர்களும், புல், பூண்டு முதலிய தாவரங்களும், உடம்பிலுள்ள உறுப்புகளும்கூட ஓங்காரவடிவமாக வளைந்திருத்தலை உதாரணமாகக் கரும்பலகையில் சில எழுதிக் காண்பித்தது வெகு அருமையாக விருந்தது.

இரண்டாவது நாளில் கனம் நாய்க்கரவர்கள், சிலர் எழுதிக் கேட்ட வினாக்கட்குத் தகுந்த விடை கூறினதுமன்றி, "தமிழ் மறை" என்பதுபற்றிப் பேசத் தொடங்கி, இப்படி இதுவரையில் யாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை-என்று பலரும் கூறும்படி, அரிய பெரிய பொருட்கள் பலவற்றை யெடுத்து விளக்கிக் காட்டி, யாவரையும் வியக்கச்செய்தார்கள் — என்று பிறர் கூறு

வதைக் கேட்டு மகிழ மட்டும் வாய்த்தது, தடுக்கமுடியாதபடி அக்காலத்து யாம் வெளியூர்க்குச் செல்ல நேர்ந்ததால். அவ்வுபன்னியாசத்தை நேரில் கேட்டு மகிழவும், அதுபற்றிச் சில வரிகள் எழுதவும் வாய்க்காமற்போயிற்றே யென்று வருந்தவும் நேர்ந்தது.

மேலும் நாய்க்கரவர்கள், அகரமே யெல்லாமென்று கூறி, அகரவெழுத்தைப் பல துண்டுகளாகச்செய்து, பஞ்சாக்கரம், சடாக்கரம், அட்டாக்கரம் முதலிய மந்திரங்களாக அமைத்துக் காட்டுகிறார்களென்று பல பத்திரிகை வாயிலாகப் படித்தும், அறிஞர் வாயிலாகக் கேட்டுமிருப்பதுமன்றி, நாய்க்கரவர்கள் அங்ஙனம் வரைந்துள்ள படத்திற் பார்த்தும் அடங்காமகிழ்ச்சி கொண்டுள்ளேம். இவர்களது நிரம்பிய நூலாராய்ச்சியும், பல மொழிகளில் இவர்கட்குள்ள பழக்கமும், அவைக்கு அஞ்சாத திறனும், தமிழின் மாட்டுள்ள பெரும்பற்றும், பொருட்செலவையும் மெய்வருத்தத்தையும் உத்தியோகத்தின் பெருமையையும் சிறிதும் பொருட்படுத்தாது பலவிடத்துஞ் சென்று தமிழுக்காக உழைக்கும் இவர்களது பெருந்தன்மையும் பலரும் எடுத்துக் கொண்டாடத்தக்கவையேயாகும். இவர்களைப்போன்று இன்னும் சில நன்மக்களைப் பெறுவளேல், நமது தமிழ்த் தாய், மிக விரைவில் முன்போல் தலையெடுத்துத் தழைப்பளென்பதில் சிறிதும் ஐயமேயில்லை.

தமிழுலகு இவர்கட்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. தமிழ்நாடு செய்த தவமே திரண்டுருக்கொண்டாற்போன்ற இப்பெரியார் நீண்ட ஆயுள்பெற்று நிலவுக. இவர்களது ஊக்கமும் உழைப்பும் மேன்மேலும் ஓங்குக. இவர்கள் நம் பார்வைக் கனுப்பிய The Tamil Alphabet its mystic aspect என்னும் புத்தகத்தைப் பற்றியும், தமிழ் மறை விளக்கம் என்னும் படத்தைப்பற்றியும் பின்னொருமுறை பேசுவோம்.

பத்திராதிபன்.

புதுவைக் கலைமகள் கழகத்தின் ஆறுவது ஆண்டுவிழாக் கொண்டாட்டம்.

புதுவையில் கலைமகள் கழகத்தின் ஆறுவது ஆண்டுவிழாக் கொண்டாட்டம், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமையின்கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாக் கொண்டாடும் சபையின் அலங்கரிப்பும், தமிழ் மணங் கமழும் வரவேற்பு வாக்கியங்கள் பொறித்துள்ள வளைவுகளும், வருக வருகவென்று கைந்நீட்டி யழைப்பதுபோலத் தெருக்களில் அசைந்தாடுகின்ற கொடிகளின் அழகும், திரள்திரளாக வெளியூர் அன்பர்களும் உள்ளூர்ச் சனங்களும் வந்து குழுமுகின்ற காட்சியும், பார்ப்பவர் கண்களுக்கு விருந்தாக இருந்ததுமன்றி, புதுவைக்கே ஓர் திருவிழாவாகவும் காணப்பட்டது.

7 – 6 – 17. வியாழக்கிழமை காலையில் விக்கினேசுவர பூசை செய்யப்பெற்றது. இரவு 8 மணிக்கு, கழக விழாவின்பொருட்டு, தமது இட்ட தெய்வமாகிய ஸ்ரீவல்லி தேவசேனாசமேத ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுளோடு எழுந்தருளிய ஸ்ரீ ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளை, கழகத்தாரும் மற்றைய அன்பர்களும் கழகத்தினின்று மங்கள வாத்தியத்தோடு சென்று எதிர்கொண்டு மிக்க சிறப்பாக விழாக் கொண்டாடும் சபைக்கு அழைத்துக்கொண்டுவந்தார்கள்.

8 – 6 – 17. வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குச் சபை கூடிற்று. விழுப்புரம் வாகீச பக்தசனசபையார் தேவாரபடனம் செய்ததும், மகா சனங்களின் வேண்டுகோளின்படி சுவாமிகள் அக்கிராசனம் அமர்ந்தருளினார்கள். உடனே அங்கத்தினர் ஸ்ரீமான் அ. பாலகிருஷ்ண நாயடு அவர்களால் வந்தனோபசார பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. பின்னர், காரியதரிசி ஸ்ரீமான் தி. திருப்புளிசாமி ஐயரவர்கள் வருடாந்த அறிக்கைப் பத்திரம் வாசித்து முடிந்ததும், அக்கிராசனாதிபதியவர்கள் அமுதமழை பொழிவதுபோல் தமது ஆரம்பப் பிரசங்கத்தைச் செய்தருளினார்கள். பின்பு, கோவல் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப் பிள்ளை அவர்கள், "இப்பொழுது" என்பதுபற்றியும், சென்னை யோகாநந்தமுனி ஆசிரமம் ஸ்ரீமத் ஷண்முகாநந்த சுவாமிகள், "பிறப்பிறப்பும், நிவிர்த்தியும்" என்பதுபற்றியும் உபந்நியசித்தார்கள். பின்னர், சபைத்தலைவரவர்கள் அப் பிரசங்கங்களை யெடுத்துப் பாராட்டி யாவரையும் களிக்கச் செய்தார்கள்.

9 – 6 – 17. சனிக்கிழமை காலையில் மகேசுவரபூசை நடைபெற்றது. மாலை 4½ மணிக்குச் சபை கூடிற்று. தேவாரபடனம் நடைபெற்றதும், புலிசை ஞானியார் மாணவர் கழகம் ஸ்ரீமான் பாலசுந்தர நாயனர் அவர்களால் "இல்லறம்" என்பதும், சென்னை வெஸ்லி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களால் "சிலப்பதிகாரம்" என்பதும், சென்னை ஸ்ரீமான் மயிலை. சோமசுந்தர முதலியார் அவர்களால் "தாயுமானர் கொள்கை" என்பதும், சென்னை ஸ்ரீமதி த. பதுமாவதியம்மை அவர்களால் "வாழ்க்கைத் துணைநலம்" என்பதும் உபன்னியசிக்கப்பட்டன. பின்னர், சபைத் தலைவரவர்கள் அப் பிரசங்கங்களின் நயங்களை யெடுத்துப் பாராட்டி யாவரையும் ஆநந்தமுறச்செய்தார்கள்.

10 – 6 – 17. ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குச் சபை கூடிற்று. தேவாரபடனம் நடைபெற, புதுவை செக்ரெத்தாரியா ஜெனொரால் ஸ்ரீமான் A. V. முத்தைய முதலியார் F. T. S., அவர்கள், "உயர்தலத்தோர்" என்பதுபற்றியும், சென்னை Accountant General's office ஸ்ரீமான் மோ. கந்தசாமி முதலியார் B. A., அவர்கள், "இராமலிங்க சுவாமிகள்" என்பதுபற்றியும் பிரசங்கித்தார்கள். பின்னர், சபைத்தலைவரவர்கள் அப் பிரசங்கங்களின் அருமைகளை யெடுத்துப் பாராட்டி யாவரையும் உவப்புறச்செய்தார்கள்.

மாலை 4 மணிக்குச் சபை கூட, தேவாரபடனம் நடைபெற, சென்னை, தொண்டைமண்டலம் பாடசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் இ. சுப்பிரமணிய முதலியார் அவர்களால் "ஜீவகாருண்யம்" என்பதும், சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களால் "திருக்கோவையார் அழகு" என்பதும், சென்னை, பண்டிதை ஸ்ரீமதி S. கிருஷ்ணவேணியம்மை யவர்களால் "பக்தி" என்பதும், ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களால் "சகோதரத்துவம்" என்பதும் பிரசங்கிக்கப்பட்டன. பின்னர் அக்கிராசனாதிபதியாகிய சுவாமிகள் அப் பிரசங்கங்களின் அருமை பெருமைகளை யெடுத்துப் பாராட்டி, தமது முடிவுரைப் பிரசங்கமாகிய அமுத மழையைப் பொழிந்து யாவரையும் ஆநந்தக் கடலில் அமிழ்த்தியருளினார்கள். உடனே காரியதரிசி யவர்களால் அக்கிராசனாதிபதி யவர்களுக்கும், உபன்னியாசகர்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்றியறிந்த வந்தனம் செலுத்தப்பட்டது. சுமார் ஆயிரம் சனங்களுக்குக் குறையாமல் கூடி

யிருந்தார்கள். தேவார படனத்தோடு மங்களகரமாக, கலைமகள் கழகத்தின் ஆறுவது ஆண்டுவிழாக் கொண்டாட்டம் சம்பூர்த்தியடைந்தது.

அக்கிராசனாதிபதி யவர்களையும், உபன்னியாசகர்களையும் மற்ற வெளியூர் அன்பர்களையும் அன்போடு உபசரித்த உபசாரணைச் சங்கத் தலைவர் புதுவை ஸ்ரீமான் கிரந்தே - சிவசங்கர செட்டியார் அவர்கள் அன்புடைமையையும், அவர்களுக்குத் துணையாக நின்ற அவர்கள் குடும்பத்தாரது ஒற்றுமையையும் நோக்கும்போது, சிவனடியார் சரித்திரங்கள் சில ஞாபகத்துக்கு வருகின்றன.

இக் கலைமகள் கழகம் ஆண்டுதோறும் இதுபோலவே விழாக் கொண்டாட்டத்தைச் சிறப்புற நடாத்திப் பலர்க்கும் நன்மைபுரிந்து, என்றும் குன்றாது நின்று நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவனை யிறைஞ்சுகின்றேன்.

கண்டு களித்தோன்.

ஐய விஞ.

அரிய பெரிய விஷயங்களை யாவரு முணர விளக்குவிக்குங் கலைமகள் பத்திராசிரியரவர்களுக்கு அநேக வந்தனஞ்செய்து எழுதிக்கொள்ளும் விண்ணப்பம்:

"தெரியுங்கா லின்மை யரிதே வெளிறு" என்ற தேவர் வாக்கு எவர்க்கும் உடன்பாடாதலின், நான் பெரியார் நூற்கண் கண்டுள்ள சில சந்தேகங்கள்பற்றி இது வரையலாயினேன்.

படைப்புக்களிற் சிறந்த மனிதன் தனது பிறப்புமுதல் இறப்புவரையில் பெரும்பாலு மனுபவிப்பது கஷ்டமே. கஷ்டம் - சுகம் - துக்கம் - சந்தோஷம் ஆகிய இவைகளை யெல்லாம் ஏற்றுக்கொள்வது பிராணன். இப் பிராணன் நிற்பதற்கு ஏற்பட்டிருக்கிற இடமே சரீரம். சரீரத்தைப் போஷித்துக்கொண்டுவருவது உறுப்புகள். அவயவத் தொழில்கள் சரிவர நடப்பதினாலே சௌக்கியமும், அவ்வாறு நடைபெறாததால் அசௌக்கியமும் உண்டாகிறது. அவயவத்தொழில் நன்கு நடைபெறச் செய்விக்குஞ் சாதனங்கள் பலவற்றுள் மருந்தும் ஒன்றே. வியாதியைப் போக்க அநுபவத்தினாலே கண்டுகொண்ட பதார்த்தமே ஔடதம். இவ் வௌடதங்களை யாக்குவிக்கு முறைகளைத் தெரிவிப்பது ஆயுர்வேதம்.

இதில் நோய் அணுகாது வாழவும் அணுகிய நோயை நிவர்த்தித்துக்கொண்டு இவ் வுலகத்தில் சுகமுறவுமான விதிகளே சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ் வாயுர்வேதம் பல மகரிஷிகளால் செய்யுள் வடிவி லமைக்கப்பெற்றிருக்கின்றது. சில செய்யுட்களுக்குப் பொருள் விளங்குவது அசாத்தியமாயிருக்கிறது. மேலே சொல்லப்பெற்றுள்ள செய்யுட்களைக் கர்ண பரம்பரையாய் அநேகர் கேட்டும் கையாண்டும் வந்திருக்கின்றனர். பெரியோர் ஒருவர் கையாண்டுவந்த புராதன ஏட்டுப் பிரதி யொன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. இதில் பொருள் விளங்காத அரிய விஷயங்களைச் செந்தமிழில் வினவி வந்தால் அவற்றைக் கண்ணுறும் பண்டிதர்கள் கருணையா லெல்லோர்க்கு மினிது பொருள் விளங்க விடையளிப்பார்களென் றுன்னியே எனக்கு விளங்காதவைகளை வரைந்துள்ளேன்.

அவற்றைக் கல்வி யறிவுடையோர் கண்ணுற்று எளியேன்மீது கருணைகூர்ந்து "கலைமகள்" வாயிலாய் விடையளித்து வருமாறு வேண்டுகிறேன்.

(I.) நவமூலத்திற்கு மருந்து:—இதில் கூறப்பட்ட மருந்தொன்றினாலேயே நவ மூலமாகிய மூலம், உள் மூலம், வெளி மூலம், ஸகஜ மூலம், உத்தரஜ மூலம், சுஷ்க மூலம், ஆத்திர மூலம், ரக்த மூலம் சீழ் மூலம் முதலிய நவ மூலங்களும் நாடாதோடுமெனக் கூறுகின்றார். செய்யுள் .... "செம்புலித் தோல் வெள்ளெலித் தோல் சின்ன சிறுக்கி முலைத்தோல் கொம்பிலிருக்கும் குதிரைவால் கூட்டி பாட்டைத் தயிரிலுண்ண நம்பியிருந்த நவ மூலம் நாடாதோடுங் கண்டீரே."

(II.) வயிற்றுக்கடுப்புக்கு மருந்து:— "வனதுர்க்கி சேர்க்கி மணித்தைலம் பூசி அனலில் வாட்டி அங்கருந்த வடுகுந் தமிழும் வளமாமே."

(III.) ஜன்னிக்கு உருக்குமாத்திரை:—"ஆரிய வடகடல் அமர்ந்த மோதகம் - சீரிய இருவரும் சிறந்த மூவரும் - கூரிய ஒருவரும் குறித்துக் கூடினால் - தீரியெனு மருந்து நெருப்போ டொக்குமே."

(தொடரும்.)

நாட்டு வைத்தியன்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(வெண்டாமரை ௫, இதழ் ௪, 83-ம் பக்கத் தொடர்ச்சி.)

தீபம் அணையும்பொழுது திருதிருவென எரிவதுண்டு; அடைமழைக்கு முன்பு அனல் வெய்யில் காய்வதுண்டு. பஜனை முடியுந்தறுவாயில் படபடபடபடவெனப் பாட்டுக்களும், மடமடமடமடவென மத்தளமும், ஜல்ஜல்ஜல்ஜல்லென ஜாலர்களும் அதி ஆரவாரமாக நடப்பதுண்டு. அவ்வாறே, அடுத்த நாலைந்து தினங்களாக இரத்தினசாமி சாவித்திரிக்குக் கூறிய இன்சொற்களும், இதமான வாக்குத்தத்தங்களும், நிகழ்த்திய உபசாரங்களும் வெகு அசாதாரணமாகப் பெருகின. அவைகளின் விவரங்களை இங்கே எழுதி முடியாது. "சாவித்திரியம்மா! எல்லாம் உன் நன்மைக்கே. நீயே வீட்டிற்கு ராணி. உன் இஷ்டம் எப்படியோ அப்படியெல்லாம் நீ நடந்துகொள். நாங்கள் எல்லோரும் உன் அடிமைகள். சத்தியமாகச் சொல்லுகிறேன், நான் உனக்கு ஒரு கோதுமைரவை யவ்வளவுகூடத் துரோகஞ் செய்யமாட்டேன். நீ பத்திரமெழுதிப் பதிவுசெய்யச் சம்மதி. இல்லாவிட்டால், அத்தான் பாடுபட்டுத் தேடிய ஆஸ்திகளையெல்லாம் அவர் தாயாதிகள் கொள்ளைகொண்டுபோய்விடுவார்கள். ஆகையால் அவைகளை என் பெயருக்கு மாற்றச் சம்மதி. அப்படிச் செய்தால்தான் அவைகளை யாரும் அணுக முடியாது. அவைகளைக் கண்காணிக்க எனக்குச் சரியான சௌகரியமும் அதிகாரமும் ஏற்படும். அந்த அதிகாரத்தையும் சௌகரியத்தையுங்கொண்டு, உன் வருமானத்தை ஒன்றுக் கிரண்டாக அதிகரிக்கப்போகிறேன். இதற்குத்தான் பத்திரமெழுதித் தரும்படி நான் உன்னைக் கேட்கிறேன். மற்றப்படி உன் ஆஸ்திகள் எனக் கென்னத்திற்கு. எனக்கு எந்த மகன் இருக்கிறான் அவைகளை ஆள. அன்னபூரணியை எவனுக்கேனுந் தத்தஞ்செய்துவிடவேண்டும். அவள் அவனைப் பற்றிக்கொண்டுபோவாள். என் மகன், என் செல்வம், எல்லாம் நீதான்" என்றவாறு அந்த மூட மாமன் தன் மருகியைக் கெஞ்சினான். சாவித்திரியோ ஒரே மனத்தினளாய்த் தான் முதன் முதற் கூறிய உத்தரத்தையே உறுதியாகப் பற்றி நின்றாள். தன் பொருள்கள்மீது அவளுக்கு அவ்வளவு பற்றிருந்ததென்று நேயர்கள் எண்ணவேண்டா. தன் மாமன் சூதாடி என்பது அவளுக்குத் தெரியாததல்ல. தன் பொருள்களை அவனுடைய சுய உரிமைக்கு அளித்துவிட்

டால் சீக்கிரத்தில் அவன் அவைகளை விற்றழித்துத் தன் குடும்பத்தை வறுமைக் கடலில் ஆழ்த்திவிடுவான் என்றஞ்சினாள். இப்பொழுதோ, அவைகள் வழங்கும் வருமானத்தைத் தான் தன் இஷ்டப்பிரகாரம் அவன் செய்யலாமேயன்றி ஆஸ்திகளைக் கொதுவைக்கவாவது விற்கவாவது அவனால் முடியவில்லை. அப்படி இயலச் செய்வதற்குத்தான் அவன் இவ்வளவு முயற்சிகள் செய்கிறான் என்றும் அவள் ஊகித்தாள். தன் கல்விச் செல்வம் பொருட் செல்வங்களைக்கொண்டு பொது நலத்திற்குரிய பல காரியங்கள் புரியவேண்டுமென்ற ஒரு அவா அவள் உளத்தில் ஒருபால் ஊர்ந்துகொண்டிருந்தபோதிலும், அது ஒன்றுமாத்திரம் காரணமல்ல, அவள் தன் மாமனுக்கு இணங்க மறுத்ததற்கு. அவன் நலத்தையும் அவன் மகள் நலத்தையுங் கருதிக்கூட அப்படி மறுத்தாள் என்ன வேண்டும். அதற்காக அவளுக்குக் கிடைத்த கைம்மாறென்ன? சுமார் ஒருமாதகாலமாக அவள் உற்றிருந்த புதிய வாழ்வு முழுவதும் பொருக்கெனக் கவிழ்ந்தமையே.

பேதைப் பெண்மணியின் புதிய வாழ்வு கவிழ்ந்து விழுந்தது. பழைய தாழ்வு அவிழ்ந்து எழுந்தது. அவள் தாலியை அறுத்த மாமன் அவள் பிரிய வீணையின் தந்திகளை அறுத்து அதைச் சமையலறைப் பரண்மேல் எறிந்துவிட்டான். புத்தகங்களாதியன பழம் புத்தக வர்த்தகர்களுக்கும், வேறு சிலர்க்கும், பலசரக்குக் கடைக்கும் கந்தப்பொடிக் கடைக்கும் கண்ட கண்டபடி விற்பனையாயின. பணிப்பெண்கள் வீட்டினின்று வெளிப்படுத்தப்பட்டார்கள். சரஸ்வதி பூஜை, இரவிக்கை தரிப்பு, குங்குமப்பொட்டு, நித்திய ஸ்நானம், காலைச்சிற்றுண்டி, இரவுச் சுடுசாத உணவு முதலியனவெல்லாம் ஒழிந்தன. பழையபடி அழுக்குடை, உரல், உலக்கை, முறம், கூடை, பதர், தவிடு, நொய், தூசி, கோணி, அடுப்பு, புகை, கரி, சாம்பல், சாணம், எருமுட்டை, குப்பை, துடைப்பக் கட்டை முதலியவைகளோடுதான் அவள் சதா பழகியிருக்கவேண்டியிருந்தது. அவளது அண்ணியாரும் மாமனும் சாதாரண இருதயங்களாற் சகித்தற்கரிய கொடுமையான சொற்களைக் கொட்டிக்கொண்டேயிருந்தார்கள். அந்தக் கண்ணியவான் அவளை எப்பொழுதும் "குலுக்கி!" என்றே அழைக்கலாயினன். அவனது தர்மபுத்திரியோ "பொறுக்கி!" என்றே விளிக்கலாயினள்.

இவ்வளவோடு நிற்கவில்லை நமது நங்கையின் அல்லல்கள். ஜீவரத்தினத்தை இழுத்துக்கொண்டு ஓடிவிடுவதற்காக முயற்சிக்கிறான் என்று ஒரு கதையும் கட்டிவிட்டாள் அன்னபூரணி. இக் கதை எழுந்ததற்கு அன்னபூரணி ஒருத்திதான் காரணமாயிருந்தாள் என்றுஞ் சொல்ல

லாகாது. ஜீவரத்தினமே அதற்கு மூல காரணன். அவன் வீட்டிற்கு வருவதையே சாவித்திரி வெறுத்தனள் என்றும், அவன் முன் தான் எதிர்ப்படுவதையும் பேசுவதையும் ஆனவரையில் அகற்ற முயன்றனள் என்றும் முன்னமே மொழிந்திருக்கிறோம். ஆனால் அந்தப் பதர்க்குண இரத்தினமோ, தான் அவள் முன் எதிர்ப்படுவதற்கும் அவளோடு பேசுவதற்கும் சந்தர்ப்பங்கள் தேடுவதிலேயே கண்ணாயிருந்தான். அவள் படும் கொடுமைகளைப்பற்றி அவள் நிலைமையின்பால் மிக அநுதாபங்கொண்டவன்போல அவளிடம் தனக்காகப் பேச வருவான். அப்பொழுது அவன் உரையைச் சற்றுஞ் செவிகொடுத்துக் கவனியாதவளாய்ச் சட்டென அகன்றுபோய்விடுவாள் சாவித்திரி. சில சமயங்களில், அவள் தனது வேலைகளைக் கவனித்துக்கொண்டிருக்கும்பொழுது அவளையே கூர்ந்து நோக்கி, காமிகளாகிய கயவர்களுக் கியற்கையான ஒரு திருட்டுவிழி விழிப்பான். அதைச் சாவித்திரி அறிந்தால், உடனே, அவள் முகம் பெண்கொலை சிசுக்கொலை புரிந்தாரது முகம்போல அவங்கொண்டு தாழும்படி, ஒரு கடும்பார்வையினால் அந்தக் கசடனை வெருட்டிவிட்டு மறைந்துவிடுவாள். அவளுடைய இவ்வித உபேக்ஷையை மாற்ற என்னென்னவோ சூழ்ச்சிகள் புரிந்து பார்த்தான் ஜீவரத்தினம். ஒன்றும் பலிதமாகாமற்போகவே அவளைத் தன் சத்துருவாகக் கருதி அவளுக்குத் தன்னா லியன்ற இடுக்கண் இழைப்பதே தனக்கொரு இன்பமெனக் கொள்ளலாயினன். ஆகையால், அவள் படும் கொடுமைகளைப்பற்றிப் பேசிப் பேசித் தன் முன் அவள் பிரலாபித்ததாக, ஒருநாள் அவன் தன் காமக்கிழத்தி அன்னபூரணிக்குக் கூறி, தான் அச் சாவித்திரியின்பால் சற்றுப் பச்சாத்தாபங்கொண்டதுபோலவும் நடித்து, தாய் தந்தை யற்ற அந்த ஏழைக் கைம்பெண்பால் சிறிது இரக்கங் காட்டி அவள் துன்பங்களைச் சற்று தணிக்கும்படி அவள் அண்ணியை வேண்டலாயினன். இவ்வேண்டுகோளினால் அந்த அண்ணியாருக் கெழுந்த ஆத்திரத்திற் களவில்லை. சாவித்திரியைப் புதிது புதிதான விதங்களில் துன்புறுத்துவதில் அவ்வளவு ஆத்திரத்தையும் தீர்த்தாள். ஜீவரத்தினத்தை வசியப்படுத்தி அவனோடு எங்கேனும் ஓடிவிடத் தன் மைத்துனி முயற்சிக்கிறாள் என்று முற்கூறியவாறு ஒரு கதையும் கட்டிவிட்டாள். இவ்வாறெலாம் நிகழும் என்று எதிர்பார்த்திருந்த ஜீவரத்தினமும், பின்னர், அன்னபூரணியோடு சார்ந்து, அகதியாய் நின்ற சாவித்திரியைப்பற்றி இழித்துப் பேசி ஏளனஞ்செய்யலாயினன்.

இரத்தினசாமியோ தன் மகள் கட்டிய கதையைச் சற்றும் நம்பவில்லை. சாவித்திரியின் தூய தன்மை அந்த வஞ்சகனுக்கு நன்றாகத்

தெரியும். எனினும், தன் புத்திரி கற்பித்த அல்லது கற்பிக்க நேர்ந்த கதையைத் தான் முற்றும் நம்பியதுபோற் பாவனைசெய்தான். இத்துணை இன்னல்களிலும், சாவித்திரி அந்த நரக வாழ்க்கையைவிட்டகல முயலாதிருந்ததுதான் வியப்பிற் குரியது. கண்ணீருகுப்பதும் கலைமகள் தியானமுமே தனது தேற்றமாகக்கொண்டு காலந் தள்ளி வந்தனள்.

இப்படி, மீண்டும் சுமார் ஒருமாதகாலம் உருண்டது. இரத்தினசாமி தன் மருமகள் பொருள்களைக் கவரும் எண்ணத்தைக் கைவிட்டு விடவில்லை. எப்பொழுதும் அதே சிந்தனையாக இருந்தான். துண்ணென ஒரு சமயம் அவன் மூளையில் ஒரு யோசனை தட்டிற்று. உடனே, "ஏ குலுக்கி!" என்று அழைத்தான். சற்று நேரத்தில் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு சாவித்திரி வந்து நின்றாள்.

"ஒரு செய்தி சொல்லுகிறேன் கேள். ஜீவரத்தினத்தை வசப்படுத்திவிடவேண்டுமென்று உனக்கு எவ்வளவு ஆசை இருக்கிறதோ அதற்குமேல் ஆசை எனக்கு உன் ஆஸ்திகளை வசப்படுத்த — ஆ —" என்றான். மாமன் பேசும்பொழுது, குப்பெனக் கண்ணீர் வடித்து நெட்டுயிர்ப் பெறிந்து சட்டென நெல்குற்றுமிடத்திற் கோடிவிட்டாள் வனிதை. "அடி குலுக்கி! ஏ குலுக்கி! இங்கே வா, முழுவதுங் கேட்டுவிட்டுப்போ" என்று கூவிக் கூவி அழைத்தான் மாமன். கோதை வரவில்லை. உடனே அவளைத் தன் முன் இழுத்துவரும்படி அன்னபூரணிக்கு ஆஞ்ஞை செய்தான். அந்தச் சற்புத்திரி உடனே சென்று, தன் அண்ணி ஏங்கி ஏங்கி அழ அழ அவள் கூந்தலைப்பற்றிக் கரகரவென இழுத்துக் கணப்பொழுதில் தன் பிதா முன்பு கொணர்ந்து நிறுத்தினாள்.

"சௌபாக்கியவதி குலுக்கி! கோபித்துக்கொள்ளாதே. உண்மையாக உன் நன்மைக்கு ஒரு காரியம் சொல்லுகிறேன் கேள். உன்னைப் பற்றிய பெரிய இரகசியம் ஒன்று இருக்கிறது. அது உன்னைப் பெற்ற பேய்களுக்குக்கூடத் தெரியாது. எனக்கும் அன்னத்திற்கும் மாத்திரம் தெரியும். அந்த இரகசியம் உனக்குத் தெரிந்தால் அதற்கு எழுபத்தெட்டுக்கோடி ரூபாய் கொடுத்தாலும் தகும் என்றே நீ நினைப்பாய். இதில் பொய்யில்லை வஞ்சகமில்லை. சத்தியமாகச் சொல்லுகிறேன் கேள். என் தலையிலடித்து, என் ஒரே பெண் தலையிலடித்து, (தன் அங்கையால் தன் சிரமீதும் தன் மகள் சென்னிமீதும் ஒவ்வொரு தட்டுத் தட்டுகிறான்) சொல்லுகிறேன். உன்னைப்பற்றிய ஒரு இரகசியம் இருப்பது சத்தியம். நீ நான் கேட்கிறபடி உன் ஆஸ்தி முழுவதையும் எனக்கு எழுதிக்

கொடுத்தாயானால் நான் அந்த இரகசியத்தை உனக்குத் தெரிவிக்கிறேன். அதை அறிந்தாயானால், உன் பொருள்கள் போவதை நீ பாராட்டமாட்டாய். இவ்வளவு காலம் நீ பட்ட பாட்டையெல்லாம் மறந்துவிடுவாய். என்ன சொல்லுகிறாய்?" என்றான் இரத்தினசாமி.

சாவித்திரியினிடம் ஒரு திட்டமான உத்தரம் அன்றையதினம் பெற முடியவில்லை. அதற்காக இரண்டு தினங்களாக அவளை நிர்ப்பந்தித்துக்கொண்டிருந்தான் அவள் மாமன். கடைசியாக, "நீங்கள் என்ன சொன்னாலும், என்னைச் சித்திரவதை செய்தாலும் நான் நீங்கள் கேட்கிறபடி பத்திரம் எழுதித் தரமாட்டேன்" என்று சொல்லிவிட்டாள். தன்னைப்பற்றி ஒரு இரகசியம் இருக்கிறது என்ற பேச்சு தன் மதியை மருட்ட எழுந்த ஒரு தந்திரப் பொய்யுரையே என்று எண்ணினாள். இச்சம்பவம் மாறக் கடிதில் ஒரு நேர்ச்சி விளைந்தது.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

படிக்காசுப்புலவர் சரிதம்.

(வெண்டாமரை ௫, இதழ் ௪, 95-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதன் பின்னர், கொங்குநாடு நீங்கி, மீண்டும் சோழநாடு வருகையில் குடமூக்கில் (கும்பகோணம்) கம்மியர் மரபினிற் றோன்றிய "தும்பன்" என்னும் புலவருக்கும், இவருக்கும், கல்வி விஷயமாக இரண்டொரு சமயங்களில் சம்வாதங்கள் நிகழ்ந்து வந்திருப்பதாக அறியப்படுகின்றது. இவ் வழக்கு நமது நாட்டுக் கவிஞர் எல்லாரிடத்துமே அமைந்திருப்பதைக் காணலாம். இது புலவர்களுக்கு இயற்கை போலும். மேற்கூறிய புலவர்களிருவருக்கும் தமிழ் விஷயமாக நேர்ந்த விரோதம் அதிகமென்பது அடியில்வரும் சீட்டுக் கவிகளால் அறியப்படுகிறது. அது வருமாறு:—

ஒரு சமயத்தில் "தும்பன்" என்னும் புலவர், அரியலூர் ஜமீன் "மழவரங்கள்" என்னும் பிரபுவுக்கு எழுதிய சீட்டுக் கவியில்,

"கொஞ்சுகவி யானையை வசைக்கவி யெயிற்றினாற்
குகவியுயி ரான்மருட்டும்
குடிலகவி ராஜசிங் கங்களைப் பங்கஞ்செய்
தும்பசா பத்தி னாலே

செஞ்சிவிஜ யாபுரிக் கோட்டைக் கபாடம்
திறக்குங் களிற்று வேந்தன்
திறல்கொண்ட லட்சுமண ரங்கமழ வேந்த்ரதுரை
ஜெயசௌர்ய னினிது காண்க
வஞ்சியர்க ளிதயமுங் கொஞ்சுபுர வியின்மனமும்
வல்லகவி ராஜர் மனமும்
மகிமைபெறு மூர்த்திக்கு மறிவரிது நின்சமுகம்
வருமுனே யறிசதுரா!
பஞ்சகலி காலப் பயங்கரன் றெண்டைமான்
பதியிலவ மான மாக்கிப்
பஞ்சலட் சணமெனுங் கசைகொண் டடித்துப்
படிக்கவே முடுக்கினேமே".

என வசை கூறியிருப்பதைத் தெரிந்த படிக்காசுப்புலவர், அச் சம்ஸ்தானப் பிரபுவுக்குத் தாம் எழுதிய சீட்டுக் கவியில்,

"கொல்லத் தமிழ்க்கவி செலுத்திவாய் வீண்பெற்ற
தும்பனெனு மொருதந்தியைக்
கொத்தியுண் டுமிழண்ட பேரண்ட மென்னவரு
கூர்படிக் காசனேலெ
வல்லச் *சிவந்தெழும் பல்லவன் றன்கருணை
மாரிபோ லேவழங்கும்
வாழ்வைக் கெடுக்கவரு தென்குடந் தைப்பதிக்
கொள்ளிவாய்ப் பேய்களல்ல
புல்லத் துரைத்தன ரெனும்பனியி னிடையிலே
புகுபரிதி நிகரென்னவே
புகழ்கொண்ட லட்சுமண ரங்கமழ வேந்த்ரதுரை
பூபனெதிர் கொண்டு காண்க

---

* இவனைப்பற்றிய விவர மொன்றும் தெரிவதற்கில்லை. தனிப் பாடற்றிரட்டிலும் தமிழ்ச் செய்யுட் சிந்தாமணியிலும் சில பாடல்கள் காணப்படுகின்றன. இதுவன்றி,

"பாராளுஞ் சீவர்கோன் பல்லவதே யத்தனுகச்
சீரால் விருந்தமைத்த சேவகனும்,"

எனவரும் கோவையொன்று மிருப்பதாகத் தெரிகிறது.

… … … …
… … … …

என்பேரி லபசார முண்டெனைத் துதிசெய்ய
எனைவர வழைத்திடுவையே."

(இரண்டடி சிதைந்துள்ளன.)

இது தவிர வேறு பாடலொன்றும் காண்பதற்கில்லை. இவர் "மாந்தை மகாசனத் தலைவருக்கு" எழுதிய சீட்டுக் கவியொன்றும் காணப்படுகிறது. அது:—

"தூளிபட வேவந்த கவிவாணர் கவியெலாஞ்
சூரையிடு கவிஞர் சிங்கம்
துட்டநிட் ரேகவி சுப்ரதீ பக்கவி
துரைக்கெலாந் துள்ளு சேட்டு
வாளைகுதி பாய்கின்ற மாந்தைதுடி மேவிய
மகாசனத் தலைவருக்கு
மட்டுலவு சோலைக் களந்தைப் படிக்காசு
வரவிட்ட விஞ்ஞாபனம்
காளமே கம்போல வசைபாட யாமுமிக்
காசினியி லவதரித்தோங்
காளத்தி யப்பன்மேற் கவிகளையு மேலுமுள
கவிதையு மறிந்ததிலையா
ஆளனு மிருக்கவே செய்தகரு மங்களுக்
கழிவுதே டுதலாகுமோ
ஆகாத காரியம் போகாது வீணிலே
யபகீர்த்தி நிலைநிற்குமே."

என்பதாம். இவ்வளவே இவர் சோழநாட்டுச் செய்தியென இப்பொழுது கண்டவை.

இங்ஙனம் சோழநாடு நீங்கிய இவர், பாண்டியநாடு கடந்து அக்கால் பெருங்கொடை வள்ளலாயும், தமிழ்வளர்க்குந் தருவாயும், அரும்பெருந் தருமங்களைச் செய்து தமிழ் வழங்குந் திக்கெலாம் புகழ் சிறந்தவருமாகிய ரகுநாத சேதுபதியென்னும், "திருமலை சேதுபதி"யின் தமிழபிமானத்தைக் கேள்வியா னறிந்து சேதுநாட்டுள்ள அவ் வள்ளலைக் காணச் சென்றனர். சென்றவர், நேரே சேதுபதியைக் காணாது முதலில்,

"விருதுபெறு கவிராச ரிற்சக்ர வர்த்திவாய்
    வீண்பேசு வார்கள் மிண்டன்
விஞ்சையர்கள் வேந்தன் களந்தைப் படிக்காசு
    விவ்ராமுட னெழுது மோலை
பொருதுபிர பந்தமது தேர்கவிஞர் சேகரன்
    புகழ்செய்தள வாய்குமாரன்
பூச்சக்ர மன்னர்பணி ரகுநாத சேதுபதி
    பூரித்தெழுந்துகாண்க
பரிதிமதி யுள்ளளவு நிற்கும்பிர பந்தங்கள்
    பாடிநின் கீர்த்தி கேட்டுப்
பஞ்சலட் சணத்தமிழ்க் காணிக்கை யுங்கொண்டு
    பரிவாக வுனைநாடியே
இருபதின் காதவழி கடலேறி வந்தன
    மிருந்தமிழ்க் கொள்ள வேண்டி
இந்நேர மேகம்மை யிருகாத வழியளவு
    மெதிர்காண வரல்வேண்டுமே."

என்னுஞ் சீட்டுக் கவியைத் தமது கற்றுச் சொல்லியின்மூலம் அனுப்பினர். கவிகண்ட அரசர் மிக மகிழ்ந்து புலவரை எதிர்கொண் டழைத்து வருமாறு தமது பரிசனரில் தகுதியுள்ளவரில் சிலரைப் புலவர்பால் அனுப்ப, அவர்களும் அவ்வாறே சென்று புலவரைக் கண்டு அரசர் அழைத்துவருமாறேவிய கட்டளையைத் தெரிவித்தனர். புலவர் களிப்பினராய் வந்த பரிசனருடன் சேதுபதியைக் காணப் புறப்பட்டு நேரிற் கண்டபோது,

"மூவேந் தருமற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றொடெட்டுக்
கோவேந் தருமற்று மற்றொரு வேந்தன் கொடையுமற்றுப்
பாவேந்தர் காற்றி லிலவம்பஞ் சாகப் பறக்கையிலே
தேவேந்த்ர தாருவொத் தாய்ரகு நாத செயதுங்கனே" †

---

† இதன்பொருள். தமிழினது அருமை யறிந்த மூவேந்தரும் அழிந்து, சங்க மழிந்து, இருபத்தொரு வள்ளல்களு மழிந்து, வேறெந்த அரசன் ஈகையு மழிந்து, கவிராஜர்கள் பெருங் காற்றில் அகப்பட்ட இலவம் பஞ்சுபோலப் பறக்கும்போது, இந்திரனது கற்பகத்தருவை நிகர்த்திருந்தாய் ரகுநாதனென்னும் வெற்றியிற் சிறந்தவனே! என்பதாம்.

மூவேந்தர் — சேர, சோழ, பாண்டியர்.

என்னுங் கவியைக் கூறி அரசரைப் பெரிதும் மகிழ்வித்தனர். சேதுபதி வேந்தர் இவர் அருங்கவிக்கு மெத்தவும் மகிழ்ந்து பல சன்மானஞ் செய்து பல்லக்கு முதலிய வரிசையுந் தந்து தமது சம்ஸ்தானத்துப் புலவராகவும் அங்கீகரித்தனரென்ப. இவ ரிங்ஙனம் சம்ஸ்தான வித்துவானாக இருக்கும்போது கும்பகோண வாசியும், கனகசபாபதியின் தவப் புதல்வருமாகிய தும்பன் என்னும் பெரும் புலவர்,

"பரமா மெனவர் தடைந்தோரைக் காத்துப் பரிவுசெய்யும்
திரமான தெய்வமுன் போன்மன்னர் காண்கறபின் சேயிழைதன்
வானாதந் தெய்வப் புலவோர்கள் போற்ற மகிழ்ந்தபுரந்
தானும் விசய ரகுநாத சேது தளசிங்கமே." (7)

(தளசிங்கமாலை)

என வியந்தோதும் புகழ்ச்சிக்குரிய ரகுநாத சேதுபதியைக் கண்டு தமது கல்வித்திறங் காட்டிப் பல்லக்கு முதலிய சன்மானம் பெற்றுத் திரும்புகையில், படிக்காசுப்புலவர், முன்னையபகைமை பாராட்டி மன்னரிடத்து,

"எதை யறிவா னிவனுக்கேன் பல்லக்குச்
சேது ரகுநாத சிங்கமே — ஓதுகின்ற
கச்சக்கும் பச்சுரைக் காய்கறிக்கா மோவதுபோல்
தச்சக்கும் பன்சொல் தமிழ்."

(பழங்கவித்திரட்டு)

என்று இழிவாகக் கூறினர். இது கேட்ட அரசர், இவ் விரு புலவர்க்குள்ளும் ஏதோ உட்பகை யிருக்கவேண்டுமெனத் தீர்மானித்து அவ் விரு புலவர்களையும் நேரில் கூட்டி உட்பகையை ஒழிக்குமாறு வேண்டி அவர்களை இணங்கச்செய்து அதனடையாளமாக ஒருவர்மீது ஒருவர் புகழ்ச்சியாகப் பாடுமாறு கூற, அவர்க ளங்ஙனமே பாடிய கவிகள் வருமாறு :—

படிக்காசுப்புலவர்
தும்பன் என்னும் புலவர்மீது பாடிய யமகம்.

"கும்பா கனக சபாபதி யீன்ற குளிர்ந்தராசிக்
கும்பா வலவர் சிரோமணி நின்றமிழ் கோப்பசுவின்
கும்பாத பாலுடன் றேனையுங் கூட்டிக் குழைத்துச்செம்பொற்
கும்பாவி லேயெடுத் துக்குடித் தாலந்தக் கூறுக்குமே."

என்று கூற,

(பழங்கவித்திரட்டு)

தும்பன் என்னும் கவி
படிக்காசுப்புலவர்மீது கூறிய கவி.

§ "மட்டாருந் தென்களந்தைப் படிக்காச னுரைத்ததமிழ்
வரைந்த வேட்டைப்
பட்டாலே சூழ்ந்சாலு மூவலகும் பரிமளிக்கும்
பரிந்தெப் போது
தொட்டாலுங் கைம்மணக்குஞ் சொன்னாலும் வாய்மணக்குந்
தொய்ய சேற்றில்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினாறு
நளினந் தானே"

என்று பாட, புலவர் சிகாமணிக ளிருவரும் ஆயுள் பரியந்தம் ஒற்றுமை யாகவே இருந்தார்க ளென்ப.

(தொடரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

வித்தை விரும்பிக்கு.

"மண்விராம்புனல்...... ...... யெழுந்தன்றே."

இ–ள். மண் விராம் புனல் விராவு அழல் மான — பிருதிவி பூதத்தொடு புணர்ந்த நீரிற் கலந்த அக்கினியை நிகர்ப்ப,— மேல் கடற்பால்— மேற்குச் சமுத்திரத்திலே, — விண் விராவு ஒளி — ஆகாயத்திடத்தே பொருந்திய செக்கர்வானமாகிய, — விராவு இருள் விளங்கு அழல் விராவும் — பரந்த இருளாகிய புகையோடு கூடி விளங்கும் அக்கினி கலந்திருக்கும் (முதுமாலைக்காலத்திலே), — எண் விராவு கால் பொர — இவற்றோடு எண்ணப்படுகின்ற மாலைமாருதம் பொருதலினால் (இருளாகிய புகைக் கற்றை நீங்க), — இதில் விராவு வான்குறியில் — இவ் வாயு பூதத்தோடு சம்பந்தமுடைய ஆகாய பூதத்தின் குறியாகிய அமுதவிந்துவைப்போல, — தண் விராவிய தவள மாமதி எழுந்தன்று — குளிர்ச்சி பொருந்திய வெள்ளிய அழகிய சந்திர னுதித்தது. எ–று.

§ இது பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடியதாகத் தனிச் செய்யுட் சிந்தாமணியில் காணப்படுகிறது.

முற்செய்யுளில் ஒளிச்செக்கர்வான் என்றாராகலின் இங்கே ஒளி என்றதும் அதனையே. ஒளியாகிய இருள் விளங்கு அழல் என்க. பஞ்ச பூதங்களும் ஒன்றோடொன்று கலந்திருப்பதைச் சூக்குமத்தேயன்றி, உலகின்கணுள்ளார் தூலத்தேயும் காணும்படி காட்டியவாறுபோலக் கரையே பிருதிவி பூதமாகவும், கடலே அப்பு பூதமாகவும், செக்கர்வானே தேயுபூதமாகவும், மாலைமாருதமே வாயுபூதமாகவும், சந்திரனே ஆகாய பூதத்தின் குறியாகவும் அவற்றின் கலப்பை மாலைக்காலங் காட்டிற்று.

மந்தமாருதத்துடன் கூடிய சந்திரோதய வர்ணனை கூறவந்தாராக லின் உவமையில் அவற்றைத் தவிர்த்து, அம் மூன்றுடன் இவ் விரண்டும் கலந்தனவென் றொழிந்தார்.

அன்றியும், மண் (கடற்) புனல் விராம் — பூமியிலே சமுத்திரநீர் செறிந்திருக்கும், — விராவு அழன் மான — அந்நீரிற் கலந்த அக்கினி யைப்போல, — மேல் கடற்பால் — மேற்குச் சமுத்திரத்தின்மேலே, — விண் விராவு ஒளி — ஆகாயத்திற் பரந்த செக்கர்வானமாகிய, — விராவு இருள் அழல் விராவி விளங்கும் — நெருங்கிய இருளாகிய புகையோடு கூடிய அக்கினி செறிந்து விளங்கும், — (அத்தருணத்திலே) எண் விராவு கால் பொர — இவற்றோ டெண்ணப்படும் மந்தமாருதம் வீச, — இதில் விராவுவான் குறியில் — அவற்றுடன் றானுஞ் சேர்ந்துகொள்ளு மெண்ணத்தோடு (குறிப்போடு), — வான்குறியில் — ஆகாயகுறியாகிய விந்துவைப்போல, — தண் விராவிய தவள மாமதி எழுந்தன்று — குளிர்ச்சி பொருந்திய வெள்ளிய சந்திர னுதித்தது, எனினு மமையும்.

பிருதிவி அப்புத் தேயுவாகிய மூன்றுந் தம்முட் கூடியிருத்தலை நோக்கி மந்தமாருதமும் வீச, அவற்றுடன் கூடிக்கொள்வான் வேண்டி ஆகாயகுறி தோற்றியதுபோலச் சந்திர னுதித்தது. இது தற்குறிப் பேற்றம்.

கடல் என்பதை முன்னருங் கூட்டிக்கொள்க. இருள் விளங் கழல் என்பது விரோதவணி. அத்தருணத்தில் என வருவிக்க. விராவு வான்குறியில் என்பதைக் கூட்டியும், பிரித்தும் பொருள் கோடல் யோக விபாகமெனும் புணர்ப்பு.

(மன்மதவிருத்திக் கேதுவாகிய மந்தமாருதமும் வீச, சந்திரோ தயமும் உண்டாயிற்றென்பது.)

ஞானவான்சேய்.

கண்மணி கமலா.

நீதிபுகட்டும் ஓர் இனிய தமிழ் நாவல்.

க-வது அத்தியாயம்.

நமது பரதகண்டத்தின் தென்பாகத்தில் கருடநதிக்கரையில் அமைந்துள்ள திருவதிகை யென்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் பல்லாண்டுகட்குமுன் சதாசிவ சாஸ்திரி என்னும் ஒரு உத்தம பிராமணர் வசித்துவந்தார்.

பாரத்வாஜகோத்திரத்தில் திருவதிகைச் சாஸ்திரிகள் வம்சமென்று பல நூற்றாண்டுகளாக நற்கீர்த்தி பெற்று விளங்கிய வம்சத்தில், அக்காலத்தில் எஞ்சி நின்றவர் இவரொருவரே. முப்பது வயது பூர்த்தியாகியும் இன்னும் பிரமசாரியாகவேயிருந்துவந்தார்.

தம் முன்னோருக்குச் சுதேச அரசர்களால் சர்வமானியமாக அளிக்கப்பட்டிருந்த பத்துவேலி நன்செய்நிலத்தின் வருவாயே அவர் ஜீவனம்சத்திற்குப் போதியதாயிருந்ததனால் இலௌகிகத்தொழி லொன்றும் இயற்ற விரும்பாது ஈசுரபத்தியிலும் சாஸ்திர விசாரணையிலுமே தம் கால முழுவதையும் செலவழித்துவருவார். வடமொழி தென்மொழிகளிலும் நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநான்கு கலைஞானங்களிலும் திருவதிகைச்சதாசிவ சாஸ்திரிகளுக்கு ஒப்புயர்வுள்ளவர்கள் தென்னிந்தியாவில் ஒருவருமில்லையென்பது அக் காலத்தில் உலகப் பிரசித்தியாயிருந்தது. கற்றதற் கேற்ப நிற்கு நெறியிலும் தம்மைப்போல உத்தம புருஷ ரில்லையென உலகமெலாங் கொண்டாடும்படி நற்குண நற்செய்கைகளில் விளங்கிவந்தார்.

தாம் நைட்டிகப் பிரமசாரியாயிருந்துவிடில் தம் கீர்த்திபெற்ற வம்சம் தம்மோடு அழிந்துவிடுமேயென்னும் எண்ணம் மாத்திரம் சிற்சில சமயங்களில் அவரைச் சஞ்சலத்திற் குட்படுத்தி விவாக விருப்பத்தை அவர் மனதில் தூண்டிவரும்.

ஆயினும் சுத்த ஞானிகளெல்லாம் கூற்றினுங் கொடியதென்று வெறுத்துவிட்ட சம்சார விலங்கைத் தரித்துக்கொள்வதற்கு அஞ்சினவராய் மணவினை செய்துகொள்வதற்குத் தாமதித்துக்கொண்டே வருவார். இவ்வாறு சாஸ்திரிகள் மனம் ஊசலாடிக்கொண்டு இருக்குங்

காலத்தில் நொண்டி சுப்பையன் என்னும் ஒரு பிராமணன் வேதம் கற்றுக்கொள்ள மிக விருப்பமுடையவனைப்போல நடித்துச் சாஸ்திரிகளையடுத்தான். உண்மையில் நொண்டி சுப்பையன் வேத ஆராய்ச்சியிலும் சாஸ்திரப் பயிற்சியிலும் கிஞ்சித்தேனும் மனக்கவலையுள்ளவனல்லன். உண்பன தின்பன நக்குவன பருகுவன ஆகிய நால்வகைப் பூசிப்புத்தான் அவனறிந்த நாலுவேதம். கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய அறுசுவைப் பதார்த்தங்கள்தான் அவன் சதா சிந்தித்துக் கொண்டிருக்கும் ஆறுசாஸ்திரங்கள். நொண்டி சப்பையனுக்கு மூக்குப் பொடியிலிருக்கும் பிரீதி மகா காயத்ரீ செபத்திலிருக்கிறதில்லை.

இருபது வருடங்களாகப் பிராமண விவாகங்களைப் பொருத்தி வைக்கும் கலியாணத் தரகுத் தொழிலை வெகு சம்பிரமமாக நடத்திவருகின்றான்.

சென்னை ராஜதானி முழுவதிலும் அதற்கப்புறமும்கூடத் தக்க வரன் கிடைக்காமலிருக்கும் கன்னிகைகளைப்பற்றிய அல்லது பெண்ணுக் கலைந்து திரியும் வரன்களைப்பற்றிய விஷயங்களெல்லாம் நொண்டி சுப்பையனுக்கு மனப்பாடமாகத் தெரியும். அவன் முயன்று முடியாத முகூர்த்தமில்லை. விக்கினேசுரரும் தம் கோரிக்கையைச் சுப்பையனுக்குத் தெரிவித்திருந்தால் அவருக்கும் ஏற்கனவே தக்க பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்துவைத்திருப்பான்.

சம்பந்தவிஷயங்களில் சமயத்திற்குத் தக்கவாறு பேசவும் ஏற்படும் சிக்குக்களை யறுத்துக் காரியத்தைப் பூர்த்திசெய்யவும் அவனைப் போல வல்லவர் உலகத்திலேயே கிடையாதென்னலாம்.

ஆயிரம் பொய்யானாலும் சொல்லி ஒரு கலியாணத்தை முடிக்க வேண்டுமென்னும் வழக்கச்சொல்லை இவனிடத்தில் பிரத்தியக்ஷமாகக் காணலாம். மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோட்டாலொத்த, சிற்சில அபரூப சம்பந்தங்களையும் இவன் செய்துவைத்திருக்கிறான். இவன் முடித்துவைத்திருக்கும் கலியாணங்களிலெல்லாம் வரதக்ஷிணையிலும் ஸ்ரீதனத்திலும் நூற்றுக்குப் பத்து இருபது என்று இவனுக்குத் தரகு உண்டு. இவ்வாறு விவாகத் தரகுத் தொழிலில் இவனுக்குப் பெருத்த இலாபம் கிடைத்துவந்தது. ஆனால் சம்பாதிக்கும் பொருள்களையெல்லாம் தான் அபிமானித்துவந்த விழுப்புரம் குப்பியென்ற தாசிக்கு அழித்துவந்தான். எனினும் உண்ண உடுத்த ஒரு குறையுமில்லை. எந்தப் பிராமண கிருகத்தில் சுபாசுபம் நடந்தாலும் அவனை அங்கே பத்துநாள் வரையிலும் முதற்பந்தியில் காணலாம்.

சிற்சில சமயம் சுப்பையன் பொய்ம்மொழிகளை நம்பித் தகாத விவாகங்களுக் குட்பட்டு முழு மோசம்போன பெண்ணகத்தாரும் மாப்பிள்ளையகத்தாரும் நொண்டித் தரகனை நையப் புடைத்தும் பவ்வீப் புரோக்ஷணஞ் செய்தும் இருக்கிறார்கள். பதினைந்து வருடங்கட்கு முந்தி இவனால் முற்றும் வஞ்சிக்கப்பட்ட ஒருவான்தான் இவன் காலை யொடித்து ஆயுள்பரியந்தம் நொண்டியாயிருக்கும்படி செய்துவிட்டானென்றும் வதந்தி.

ஆனால் எந்தச் சிக்ஷை கிடைத்தாலும் ஒவ்வொரு தொழிலினும் இலாப நஷ்டங்க ளுண்டென்று தேர்ந்தவனாய் உப்புக்கண்டம் பறி கொடுத்த பிராமணத்தியைப்போல் பிறரொருவரும் அறியாதவண்ணம் அதைப் பொறுத்துக்கொள்வான்.

பிணம் எங்கு வீழ்ந்தாலும் கழுகுக்கு மூக்கில் வேர்க்கும் என்பது போல, திருவதிகைச் சதாசிவ சாஸ்திரிகளின் மனம் விவாகத்தில் நாடியிருப்பதை எவ்வாறோ அறிந்து நொண்டி சுப்பையன் அவரிடம் வந்து சேர்ந்தான்.

திருப்பாதிரிப்புலியூர்க் கைம்மேற்றட்டுக் கந்தசாமி ஐயர் ஏகபுத்ரி சிவகாமியைத் திருவதிகைச் சதாசிவ சாஸ்திரிகளுக்குக் கன்னிகாதானம் செய்துவைக்கவேண்டுமென்ற எண்ணத்துடனேயே அம் மகானைத் தரகு சுப்பையன் அடைந்தது.

கந்தசாமி ஐயரென்பவர் திருப்பாதிரிப்புலியூர் ரெயில்வேஸ்டேஷனுக்கு எதிரில் சாப்பாட்டுக்கடை வைத்திருக்கும் ஒரு பிராம்மணர். அவர் கிளப்பில் வருபவர்களிடத்தில் சாப்பாட்டுக் கிரயத்தை முன்னதாகப் பெற்றுக்கொண்ட பிறகுதான் அன்னத்தை இலையில் இடுவார். இதனாலேயே அவருக்குக் கைம்மேற்றட்டுக் கந்தசாமி ஐயர் என்று பெயர் வழங்கலாயிற்று.

இவர் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முந்தி ஒரு பிரபுவினிடத்தில் சுயம்பாகிவேலை செய்துவந்தவர். கையில் கொஞ்சம் துட்டு சேரவே தனிமையில் வியாபாரம்செய்து பொருளீட்ட விரும்பி ஒரு ஏழை அநாதப் பிராமண கன்னிகையை மணம்செய்துகொண்டு ஒரு சாப்பாட்டுக் கிளப்பு வைத்தார். இவர் அகமுடையாள் மீனாக்ஷி ஸ்தூல சரீரமும், சிவந்த தோலும், பரந்த முகமும், வைசூரியினால் சல்லடைக் கண்களைப் போல் துளைபட்ட மேனியும், ஓரக்கண் பார்வையும் உடையவள். எப்போதும் காசில் கண்ணுங்கருத்துமா யிருப்பவள். கிளப்புக்குப் புதிதாக யாரேனும் சாப்பிட வந்தால் வந்தவரை அவள் ஓரக்கண்ணால் பார்க்கிறது

எங்கேயோ யாரையோ பார்க்கிறதுபோலிருந்தாலும் வந்தவர் அந்தஸ்து செல்வம் குணங்கள் அனைத்தும் ஒரு நொடியில் ஊகித்தறியும் சக்தியுடையவள்.

மீனாக்ஷியின் ஏக புத்திரி சிவகாமி ரூபத்திலும் சாயலிலும் சாய்ந்த பார்வையிலும் முற்றும் தன் தாயைப்போன்றவள். குணத்திலோ அவளினும் வல்லாளகண்டியென்னலாம்.

கந்தசாமி ஐயர் பன்னிரண்டு வருஷமாய் நடத்திவந்த வியாபாரத்தில் நல்ல லாபம் வந்துகொண்டேயிருந்தது. அவர் கிளப்பில் விசேஷ சௌகரிய மென்னவென்றால் எந்நேரத்தில் எத்தனைபேர் சென்றாலும் சாதம் கிடைக்கும். அர்த்தராத்திரியிலும் ரெயிலில் வந்திறங்கும் பிரயாணிகளுக்கெல்லாம் கைம்மேற்றட்டுக் கிளப்பில் சென்றால் சாப்பிடலாம் என்கிற உறுதியுண்டு. இருபது முப்பதுபேர்கள் ஒருமிக்க வந்தாலும் கந்தசாமி ஐயர் சிரமம் பாராமல் வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு மூக்கைச் சிந்தித் தொடையில் தேய்த்துக்கொண்டு கொடுக்கும் காசை யெண்ணி மடியில் பத்திரப்படுத்திவிட்டுப் பம்பரம்போல் சுழன்று ஒரு கணப்பொழுதில் எல்லோருக்கும் அன்ன பதார்த்தங்கள் படைத்து விடுவார்.

மீனாக்ஷியும் சிவகாமியும் பருப்புக்குண்டானையும் நெய்க் கிண்ணத்தையும் எடுத்துப் பின்சென்று அகப்பை நிறையப் பாத்திரத்தில் மொண்டு மொண்டு அகப்பையிலேயே பெரும்பான்மையும் தங்கிவிடும்படி அதை யொருவாறு சுழற்றி மிகுதியை மாத்திரம் இலையில் கொட்டித் தங்கள் வேலையை ஒரு விநாடியில் முடித்துவிடுவார்கள்.

(வரும்.)

தம்பி – புருஷோத்தமன்.

நாவலா ?

நாவல் என்னும் ஆங்கிலமொழிக்கு ஏற்ற தமிழ்ச்சொல் இன்னதென ஆராய்ந் தறியக்கூடாததாக விருக்கின்றது. நம்மவர்களோ, ஆராய்ச்சியாளர்க்கு வீண் சிரம முண்டாக வேண்டா என்ற எண்ணங்கொண்டோ மற்றென்னோ, அவ் வாங்கில மொழியையே தமிழ்ச்சொல்லாக வழங்கிவருகிறார்கள். தமிழ்ப் பற்றும் தேசாபிமானமும் பொருந்திய நண்பர் பலர் "கதை" என்றும் "சரிதை" என்றும், "நவீனகம்"

என்றும், "புதுவது புனைதல்" என்றும் பலவிதமான பதங்களை நமக்களித்துள்ளனர். நவீனகம் எனினும் புதுவது புனைதல் எனினும் பொருளால் ஒன்றே. ஆகவே நாவல் என்பது கதையா? அல்லது நவீனகமா? எப்பெயரைக் கொள்வது? என்பதே நாமாராயக்கிடப்பது. இருக்கட்டும்.

கதை என்பது யாது? எப்போழ்து உண்டாகியது? எத்தகைத்து?

மானிடர்க்குள் மற்றைய மக்களைப்பற்றிய செய்திகளைக் கேள்வியுறுவதில் ஓர்வித ஆவல் இயற்கையாகவே உள்ளது. பிறனது சுகத்தைக் கண்டு களிப்புறுவதும், அவனது இடுக்கண்ணோர்ந்து அநுதாபப்படுதலும் மாந்தரின் உடன்பிறந்த இயற்கைக் குணமாகும். ஆக, பண்டைக்காலம் முதற்கொண்டே "கதை! கதை!" யெனக் கதையின் அமைப்பும், கதை சொல்வோர் கதை கேட்போர் எனக் கதா வினோதரில் இருவித பாகுபாடும் உண்டாயின. இவ் வேற்பாடு சுமார் 8000 ஆண்டுகளுக்கு முன்னாக நம் நாட்டி லுண்டாகியதெனக் கூறலாகும். அதாவது மானிடன் தன் பேசுந்திறனை யறிந்து, இன்ன பொருளை யின்ன சொல் குறிக்கும் என ஒழுங்குகளை யோர்ந்து, வழங்கி, நாவன்மையிற் சிறிது மேம்பாடுற்ற காலத்தில் — வடநாட்டில் ஆரியர் தம் வேதங்களை இயற்றத் தொடங்கிய காலத்தே — இது தமிழருக்குள் உருவாகியது. அதற்கு அப்போழ்து எப்பெயர் வழங்கியதோ நாம் அறியோம். (கதை என்பது பின் வந்த ஆரியப் பெயர்.) ஆனால் அக் கதை மனிதன் கூறியவை யாவற்றையும், மனிதன் மனமுவந்து கேட்பவை யாவற்றையும் குறிக்கும் எனவும், பேசும் நடை — அதாவது இயல் நடை — யிலும், காப்பிய நடையிலும் இயற்றப் பெற்றவை யாவையும் சுட்டும் எனவும் மாத்திரம் நாம் கூறுதல் கூடும்.

பின்னர், கதை என்பது நம் மிலக்கியத்திற் கண்டதா? எனின், அதற்கு, நம் மிலக்கியத்துள்ள கதைப் போக்கும் திறனுமே போதிய சான்றாம். கதைகளை ஒரு கோவையாகச் சேகரித்து வைத்தவரை நாம் காண்கிலம். நாம் கேள்வியுறும் சில கதைக் கொத்துகள் சில நூறு ஆண்டுகளின் முன் பிறந்தவை என்பதும், ஆரியம் முதலிய பல மொழிகளினின்றும் மொழி பெயர்த்தவை என்பதும் தெரிகிறது. எனினும் நம் மிலக்கியத்திற் கையாண்ட கதைகளின் அளவைக் காணின் கதைகள் மையிறகு கொண்டு காகிதத்தில் வரையப்பட்டிராவிடினும், ஏடுகளிற் சாற்றக் கிடையாவெனினும் ஏராளமாக இருந்ததெனக் கூற இடந் தரு

கிறது. இதுவே தவிர நாமிவ்விஷயத்தில் எதுவும் சொல்வதற்கில்லை. நம் இலக்கியத்தில் இப்போ திருக்கும் பழைய நூல் தொல்காப்பிய மென்பர். அது இற்றைக்கு 5000 வருடங்களின் முன் உண்டானதாம். அதன் முன் இலக்கியம் மிகச் சிறப்புற்றிருந்ததென்பது தொல்காப்பிய மெனும் இலக்கணநூலொன்று ஏற்பட்ட காரணத்தானே. "இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்" என அந் நூலார் கொண்ட சித்தாந் தத்தினின்றே கொள்ளப்படும். அதன் முன் நிலவிய நூற்களைக் கடல் கொண்டதெனச் சாற்றுகின்றனர் நச்சினார்க்கினியரும்.

சிற்க, அக் கதைகள் எவ் விஷயங்களைத் தழுவி நின்றன? சாதாரணமாக முதற் றோன்றிய மனிதர் தம்மைச் சுற்றிலும் சூழ்ந்தா விருந்த இயற்கைப் பொருள்கள் யாவையும் கண்டு, குகைகளிலும் மரங் களிலும் வதிந்து தம் வலியினுங் குன்றிய வலிமை பொருந்திய 'ஜீவன் களை அடக்கியும், தம் வலுவின் மிஞ்சிய பிராணிகளைப் புசித்தும், தம் கையிற் படாத புட்கள் விலங்குகள் யாவற்றிற்கும் ஒவ்வோர் பெயர் கொடுத்து அவற்றினுள்ளும் தம் போன்றதும் தம்மினும் மேம்பட்ட தோர் திறனுளதெனக் கொண்டு தெய்வமெனக் கருதி வழிபாடு செய் தும் வந்தனர் என்பது நாம் கொள்ளத்தக்கதே. ஆக, இத்தகைய மாந்த ரது இலக்கியத்தின் கண் நாம் நம்பத்தகாத — நம் நாகரிகங்கொண்டு நடந்திராது எனச் சொல்லக்கூடிய — கதைகளே தான் பரவியிருக்கக் கூடும். இராக்கதரும், அருவங்களும், தெய்வங்களுமே அவர்கள் கதை களில் நிரம்பியிருக்கும். இக் கதைகளே பின் வந்த ஏராளமான புராண கதைகளுக்குத் தக்க சாதனங்களாக இருந்தன எனச் சாற்றவும் கூடும். இவைகளே எவ்விலக்கியத்தும் பழமையானவை. சுமார் 7000 வருடங் களின் முன்னிருந்தவை. இராமாயணமும், மாபாரதமும் சற்றேறக் குறைய 5000 வருடங்களின் முன்தா னுண்டானவை எனின், இது அக் கதைகள் ஒரு கோவையாகச் சேர்த்துத் தொகுக்கப்பெற்ற காலமே தவிர அவை யுண்டான காலமல்லவென்பது திண்ணம்.

ஆக, இதுவே நாம் கதையைப்பற்றிச் சொல்லக்கூடியது. தமி ழில் ஆதியிலுண்டான புராணங்கள் ஒன்றும் நம் கையிற் படவில்லை. இராம காதையைப்போன்ற காதை யொன்று தமிழில் இருந்திருக்க வேண்டும் என்பது கிரேக்கர்களது "இலியட்" என்ற காப்பியத்திற்கும் இராமாயணத்திற்கும் உள்ள ஒற்றுமையானும், சாதாரணமான நாகரிகத் திற் றேர்ந்த மாந்தருக்குள் இம் மாதிரியான கதையே உண்டாயிருக்க ஏது விருப்பதானும் யூகத்தாற் சாதிக்க இடந் தருகின்றது. ஆக, அவை

ஆதிகாலத்தே உண்டானவை என்பதும், அவை ஒரு ஒழுங்காக இலக்கண மமையாது மாந்தர்க்கு இன்பமளிக்கும் எல்லா விஷயங்களையும் தன்பாலணிந்து கவினுற விளங்கின என்பதும், நாள் முழுவதும் உழைத்து ஓய்ந்த மாந்தரால் மாலையில் அல்லது முன்னிரவில் சிறிது காலப்போக்குக்காகச் சாற்றப்பட்டவை ஆக அச் சிறு காலத்தே முடிய வேண்டியிருத்தலால் உருவிற் சிறியவை என்பதுமே நாம் கூறலாகும். பின்னர் இலக்கணமுற்றும் பொலிவுற்றுப் பரவியிருந்தது என்பதும், ஓர் காலத்து விளங்கியிருந்தது எனப் பண்டை யுரையாசிரியர் கூறும் நாடகவியற் பெருக்கிலிருந்து நாம் யூகிக்கக்கூடியதே நாடகம் என்பது எவ்விலக்கியத்தும் கடையிற் றோன்றுந் தகைமையால்.

நிற்க, நாவல்களைச் சிறிது கவனிப்பாம்.

இப் புதிய விலக்கியப் பகுதியானது சுமார் இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்குள்ளாகவே, ஆங்கிலக்கல்வி கற்று அதிற் சிறந்த நாவல்களின் உருசியை யுணர்ந்த கல்வியாளர் சிலரால் தாபிக்கப்பெற்றது. அவர்கள் ஆங்கிலத்திற் கண்ட நாவல்களின் போக்கையும் இயற்கையையும் கவனித்து, அவற்றைத் தம் வழிகாட்டி யாக்கொண்டு சந்தர்ப்பங்களை நம் பழக்கங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் மாறாக இல்லாமல் இயற்கையை யனுசரித்ததாகவே தம் நாவல்களில் இயைய வமைத்தனர். — நா மிதைப்பற்றி யதிகம் வரைதல் கூடாதது. நம் நாவல்களின் போக்கையும், வளர்ச்சியையும் நம் நண்பர் தாமே யறிவர். தமிழ்நாட்டு நாவல்கள் இன்னும் நன்றாக முதிர்ச்சி அடையவில்லை.

ஆனால் இந் நாவல்களில் முக்கியமானதோர் அம்சம் கவனிக்கத்தக்கது. நாவல்கள் ஜனசமூகத்திற்கு ஓர் கண்ணாடியாகும் என ஆசிரியர் ஒருவர் எழுதுகின்றார். கண்ணாடி கைக்கொண்டு நம் உருவினை யதிற் கண்டு நம்மீது படிந்திருக்கும் மாசு முதலியவற்றை யகற்றுவதுபோல், நாவல்களும் சமூகத்தின் ஓர் பகுதியாகும் சில மக்களை நம் முன் விடுத்து, சந்தர்ப்பத்திற் கேற்றவாறு அவர்களை நடிக்கச்செய்து, அவரவர்களின் நல்வினை, தீவினை முதலியவற்றிற்குத் தக்க பயனை யூட்டுவித்தும், மனுஷ்ய சுபாவத்தையும் அதன நற்குணங்களையும் அதன் அழுக்காறுகளையும் எடுத்துக் காட்டி, உலக வியலை யூட்டுவிக்கும் ஆசானெனவும் நீதிநெறி கற்பிக்கும் குலகுருவெனவும் விளங்குகின்றது. நடந்ததே நவில்வது என்னும் கொள்கையுங்கொண்டது.

ஆக, இவ் விரு இலக்கியப் பகுதிகளின் இயலையும் போக்கையும் கவனிப்பார்க்கு நாவல் என்பது புதியதல்ல, மானிடன் நாவின் திறனை

யறிந்து ஆளத் தொடங்கிய காலம் முதலாக நாவலின் சின்னங்கள் வெளி யாயின. நாவல் என்பது இலக்கணம் நன்கமையப்பெற்ற கதையே யாகும் என்பது விளக்கமாம். எனினும் "நாவல்" என்ற பதத்திற்கு "கதை" என்பதைவிட "நவீனகம்" என்பதே பொருளில் நேர்புடையது.

எனினும், நவீனகம் என்னும் சொல் இவ் விலக்கியப் பகுதியின் இலக்கணத்தை முற்றும் தெரிவிப்பதாக ஆகாது, ஓர் பொருளைக் குறிக்கும் ஆற்றல் அடைமொழிக் கில்லையாதலால். ஆக "நாவல்" என்பதை நேரில் மொழிபெயர்ப்பது மாத்திரம் சரியல்ல. மொழிபெயர்ப்பார் கடமை முதனூலிலுள்ள குற்றங்களைக் களைந்து குணங்களை நன்கெடுத்து விளக்கிக் கவினுறச் செய்தலேயாகும்.

"நாவல்" என்பதின் முழுப்பொருள், "புதிய மாதிரியாக இயற்கையைத் தழுவி வரையப்பெற்ற ஒரு கதை" என்பது. இதை எப்பதத்தினுற் றெரிவிக்கலாகும்? சாதாரணமாக, தம் இலக்கணத்தை நன்கு விளக்குந் தன்மையனவன்றோ நாமிடும் பெயர்கள் யாவும்? பெயர் என்பது ஒருவகைப் பொருளை மற்றைப் பொருள்களினின்றும் பிரித்து அப்பதம் மொழிந்தவாது கருத்திலுற்ற பொருளைச் சுட்டிக் காட்டுவதற்காக வல்லவோ?

அப்படியாயின், "நாவல்" என்பதற்குத் தமிழ்மொழி என்ன? கதை யெனின் மரியாதைராமன் கதை முதலிய பலவித கதைகளினின்றும் பிரித்துக் கூறுவதெப்படி? நவீனகம் எனின் அது சரியான பொருளை எங்ஙனம் குறித்ததாகும்?

நம் நண்பர் ஒருவர் "நாவல்" என்பதற்குப் பதிலாக "நவில்" என்ற பதத்தை யுபயோகிக்கலாமென எழுதுகிறார். "நவில்" எனின் நடந்ததே நவில்வது என்னும் இலக்கணந் தழுவி, நடந்ததை, உலகில் இயற்கையாக நடப்பவற்றை நல்ல தமிழில் நவில்வது எனும் பொருள் கூறுகின்றார். இதிற் சிறிது இலக்கணமுள்ளதெனவே நானும் கருதுகின்றேன். "நாவல்" என்ற பதத்தை யுபயோகிப்பது நம் அறியாமையைக் குறிக்கும். தமிழ்மொழிபோல் அகத்துற்றவைகளை யப்படியே தெற்றென விளக்கும் ஆற்றலுடையமொழி எது? நாம் தமிழினைக் கைசோரவிட்டதுமன்றி, பிறமொழிச் சொற்களையும் இழிவுறப் புணர்த்தல் பெருந் தீங்கு ஆகும்.

நாவலர்களே! நாவலவர்களே! நாவலா, நவிலா? எது ஒப்புடையது? வேறு ஒப்புடையது உண்டெனினும் நவில்வீர்!

ரா. வாசுதேவன்,

புதுவை.

ஒரு செய்யுள் பேதமும், ஐயமும்.

"முன்னவரு நானல்ல முடிமன்னர் நானல்ல
துன்னுவசி யருமல்ல சூத்திரரு நானல்ல
வன்னியரு நானல்ல வன்னியரு நானல்ல
பின்னமொடு பிறப்பிறப்பு யில்லாத பிரமநான்."

என்று வள்ளலார் சாத்திரம், சுருதி விசார விளக்கம் 2-வது வாக்கியம் 10-வது கவியில் காணப்படுகிறது. ஏட்டுப் பிரதி ஒன்றில் மேற்படி கவி கீழ்க்கண்டபடி அமைந்துள்ளது. அது தான் சரியாயிருக்குமென்று சிலர் செப்புகின்றார்கள். அது வருமாறு:

"முன்னவரு நானல்ல முடிமன்னர் நானல்ல
வன்னியரு நானல்ல வன்னியரு நானல்ல
துன்னுவசி யருமல்ல சூத்திரரு நானல்ல
பின்னமொடு பிறப்பிறப்பு யில்லாத பிரமநான்."

இவற்றுள் சரியானது எது? இங்கு வன்னியர் என்பது எந்த அபிப்பிராயத்துடன் அமைந்து நின்றது? வன்னியர் என்ற தொனி இருமுறை பயின்றிருப்பதின் அர்த்தபுஷ்டியாது?

இவற்றை முன்னோர் நூல் வழக்கிற்கு முரண்படாமல் மேற்கோளுடன் சந்தேகம் நீங்குமபடி விளக்க வேண்டுகிறேன்.

கூடிய சீக்கிரத்தில் கலைமகளைக் கண்ணுறுங் கல்வியாளர் கவனித்து விடை தருவார்களென்று எதிர்பார்த்து நிற்கும்

பொதுநல ஊழியன்,

திருப்புகழ். M. R. கோனைய பூத்தர்.

களக்காடு விசுவகர்ம சபை

முதலாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம்.

இச் சபையின் முதலாவது ஆண்டு விழாக் கொண்டாட்டம் நிகழும் 1917-ம் ஆண்டு மே மாசம் 21 – 22 இந் நாட்களில் சிறப்பாக நடைபெற்றது.

மீனாக்ஷிபுரம் சம்ஸ்கிருத பண்டிதரும் ஜோதிஷ சாஸ்திர நிபுணருமாகிய ஸ்ரீமான் முத்து ஆச்சாரியார் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். சுற்றுப் பக்கங்களிலுள்ள கிராமங்களிலிருந்தும், பாளையங்

கோட்டை, நாங்குனேரி, திருக்குறுங்குடி, ஏறுவாடி, வள்ளியூர், வாலியூர் கருங்குளம் முதலிய இடங்களிலிருந்தும் பல கனவான்கள் விஜயஞ் செய்திருந்தனர்.

அக்கிராசனுதிபதியவர்கள் ஆரம்பப் பிரசங்கம் வெகு இனிமையாக இருந்தது. கோட்டாறு தமிழ் வித்வான் ஸ்ரீமான் •ஜி. சுவாமிநாதன் ஆச்சாரியார் அவர்களால் "கல்வி" யென்பதும், "பரோபகாரம்" என்பதும் உபன்னியசிக்கப்பட்டன. மீனுக்ஷிபுரம் ஜோதிஷர் ஸ்ரீமான் அநந்தபெருமாள் ஆச்சாரியார் அவர்கள் "ஒழுக்கம்" என்பது பற்றி உபன்னியசித்தார்கள். திருவாரூர் ஜோதிஷர் ஸ்ரீமான் வைத்தியநாதசுவாமி ஸ்தபதியார் அவர்கள் எழுதியனுப்பிய "புத்திரப்பேறும், கல்வியும்" என்ற வியாசம் வாசிக்கப்பட்டது. பாரஸ்டர் ஸ்ரீமான் முத்தையா பிள்ளை அவர்களால் போஞேகிராப் கச்சேரி நடத்தப்பட்டது.

விசுவகர்ம மரபினரின் கல்வி, கைத்தொழில், ஆசாரம் முதலியவைகளின் சீர்திருத்தத்தைப்பற்றிய சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. அதற்கென்று ஒரு நிதியும் சேர்க்க முடிவுசெய்தனர்.

அக்கிராசனுதிபதியவர்கள் முடிவுரைப் பிரசங்கத்துக்குப் பிறகு, யாவருக்கும் நன்றி செலுத்தப்பட்டும், புஷ்ப ஹார சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டும் சபை பூர்த்தியடைந்தது.

வீரவாகு,
சபையின் காரியதரிசி.

நியாயமாலா.

2-வது சதகம்.

(வெண்டாமரை ௫, இதழ் ௩, 71-ம் பக்கத் தொடர்ச்சி.)

11. கூபபேக நியாயம்:— கூபம் = கிணறு, பேகம் = தவளை, நியாயம் = திருஷ்டாந்தம்.

இது யாதொரு ஆராய்ச்சியுமின்றி உண்பதும் உறங்குவதுமே புருடார்த்தமாகக் கொண் டுழல்பவர் தன்மை யிதுபோல வென்கின்றது. அதாவது: கிணற்றுத் தவளை, தானிருக்கும் கிணற்றைவிட வேறு உலகமே கிடையாதென யாதொரு விசாரமுமின்றி யிருத்தல்போல வென்கின்றது.

12. கடயந்திர நியாயம்:— கடயந்திரம் = ஏற்றம், நியாயம் = திருஷ்டாந்தம்.

இது ஒரு நூலானது ஒரே விஷயத்தை மேலுமேலும் எடுத்துக் கூற லிதுபோல வென்கின்றது. அதாவது: ஏற்றமானது ஜலத்தையே மேலுமேலும் இறைப்பதுபோல வென்கின்றது.

13. துல்யவித்தி நியாயம்:— துல்யவித்தி = ஒத்தவறிவு, நியாயம் = திருஷ்டாந்தம். இது ஒருணர்வால் அதனொத்த உணர்வு முண்டாத லிதுபோல வென்கின்றது. அதாவது: இராமேச்சுரம் காசிக்குத் தெற்கேயுளதென்னு முணர்வால், காசி இராமேச்சுரத்திற்கு வடக்கின்கணுளதென்னு முணர்வு முண்டாதல்போல வென்கின்றது.

14. ஸதிகுட்யே சித்திர நியாயம்:— ஸதிகுட்யே = சுவரிருக்க, சித்திரம் = சித்திரம் வரையப்படும், நியாயம் = திருஷ்டாந்தம்.

இது ஆதாரமிருக்க அதன்கண் ஒரு காரியம் நிர்வகிக்கப்படும், இன்றேல் காரிய நிர்வாக முண்டாகாதென லிதுபோல வென்கின்றது. அதாவது: சுவரிருந்தால் சித்திர மெழுதப்படும், அஃதின்றேல் சித்திரம் வரைதலின்றென்பதுபோல வென்கின்றது.

(வரும்.)

இதோபதேசி.

சந்நியாச விஷயம்.

(வெண்டாமரை ௩, இதழ் ௩, 71-ம் பக்கத் தொடர்ச்சி.)

வித்வத் சந்நியாசங்கூறல்.

பிரம்ஹசரிய, கிருகஸ்த, வானப்பிரஸ்தமென்னும் மூவித வாச்சிரமத்தினுள் எவ்வாச்சிரமத்தினின்றேனும், வேதாந்த சிரவணாதிகளால் பிரம்ஹ சாட்சாத்கார மடைந்த தத்துவமுணர்ந்தோரால், சித்த விக்ஷேப நிவர்த்தி வடிவான ஜீவன் முத்தியின் பொருட்டுக் கொள்ளப்பட்ட சந்யாசம் வித்வத் சந்நியாச மெனப்படும். இதில் சுருதி:— "இப் பரமான்மாவை "அஹம்பிரம்ஹாஸ்மி" என்று சாக்ஷாத்கரித்த வித்வான் பரமஹம்ச சந்நியாசியாகின்றான். ஆன்ம சாக்ஷாத்காரத்தால் தத்துவ முணர்ந்தோர் புத்திரேடணை, வித்தேடணை, உலக வேடணை என்னும் மூவேடணைகளைவிட்டு வித்வத் சந்நியாசத்தைத் தரிக்கிறார்கள். 'தத்வ

வேத்தாவான அப் பரமஹம்சன் தண்டம், சிகை, பூணூல், ஆடை இவற்றைத் தரிப்பதில்லை." இவ் வித்வத் சந்நியாசத்திற்குச் சிவன் முக்தியே பயனும். இந்த வித்வத் சந்நியாசிகளின் குறிகளும், ஒழுக்கங்களும் அறியப்படுவனவன்று. இதனாலேயே சுருதியிலும் மிருதியிலும் சிலவிடத்து அவர்கட்குத் தண்டம், வஸ்திரமுதலியவற்றின் அபாவமும், சிலவிடத்து அவற்றின் தாரணமுங் கூறப்பட்டிருக்கின்றன. இவ் வித்வத் சந்யாசிகளின் அவ்வியக்தமான குறிகளும், ஆசாரங்களும் ஆன்மபுராணம் பதினோராவது அத்தியாயத்தின் முதலில் தெளிவா யெழுதப்பட்டிருக்கின்றன.

(வரும்.)

இதோபதேசி.

புத்தக நன்கொடை.

புதுவை கவர்ன்மெண்ட் புத்தகசாலை உத்தியோகஸ்தர் ஸ்ரீமான் சிங்காரவேல்பிள்ளை அவர்கள், 1. பிரபோத சந்திரோதயம், 2. விசுவபிரம புராணம் ஆகிய இரண்டு புத்தகங்கள், நமது கலைமகள் கழகத்திற்கு நன்கொடையாக அளித்தார்கள். இதற்கு முன்னும் இவர்கள் பல புத்தகங்கள் நமது கழகத்திற்கு நன்கொடை யளித்தவர்கள். அன்பு கூர்ந்து அரிய புத்தகங்கள் உதவிய இப் பரோபகார சீலர்க்கு, புதுவைக் கலைமகள் கழகத்தார் பெரிதும் நன்றி செலுத்துகின்றார்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்,

கழகத்தின் காரியதரிசி.

புத்தக வரவு.

மனத்திற் குறுத்தும் மதி விளக்கம்.

இந்நூல், தன் பெயர்க்கேற்றவாறு மதி விளக்கந் தரக்கூடிய பல பொருட்களைத் தன்னுள் நிரம்பக்கொண்டு, படிப்பவர்கட்குப் பெரிதும் பயன்றரக்கூடியதாக அமைந்துள்ளது. ஆடவர், மகளிர், சிறுவர் யாவரும் படித்துத் தெரிந்துகொள்ளும் வண்ணம் எளிய தமிழ் நடையில் இனிமையாக எழுதப்பட்டிருக்கிறது. மனத்திற்கு இடித்து அறிவுச் சுடர் கொளுத்தப்படும் வகையில், உலகத்தில் மக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய அறங்கள் பலவற்றை இந்நூல் விளக்குதலால், இது ஒவ்வொருவர் கையிலும் இருக்கத்தகுந்ததே. 156 சிறு பகுதிகளாக உரை நடையில் அமைக்கப்பட்டுள்ள இந்நூலின் விலை அணா நான்கே யாகும். இதனை ஆக்கியோர் வித்தியாவசானம் ஸ்ரீமான் பிரம்ம. ப. பொன்னுவேற் பிள்ளையவர்கள்.

இதனை நமது பார்வைக் கனுப்பிய இந் நூலாசிரியர்க்கு நமது நன்றியை யனுப்புகின்றோம்.

ப-ர்.

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும் தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும் ரோமத்தில் பூசுவதனால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்.
ஏஜெண்டுகள் தேவை.
3 கேக் உள்ள பெட்டி 1-க்கு 0—14—0
ஒரே தடவையில் 2 பெட்டிக்கு 1—10—0
தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்: வைரம் அண்டு கம்பெனி,
3. இருளப்பன் வீதி, மதராஸ்.

தலைமயிர் நரைத்து கிழவர்களைப்போல் ஏன் காணப்படுகிறீர்கள்!

எங்கள் தர்பார் கேச கலாப்பை ஒரு தடவை உபயோகிப்பதினால், பித்தத்தினாலோ அல்லது வயதினாலோ மயிர் நரைத்துவிடுகிறதைத் தடுத்து பழைய கருப்பு நிறத்துக்கே திருப்பிவிடுகிறது. மற்ற தைலங்களை வெகு நாள் விடாது தடவிவந்தால்தான் குணம் தோன்றும். இத்தைலத்தையோ 5 நிமிஷம் உபயோகித்தால் முழுக் கருப்பாகிவிடும். நல்ல வாசனையும் வீசும். கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும் கொடுக்கும். ஒரு தடவை வாங்கினால் உண்மை தெரியவரும்.

புட்டி, புருஷ் உடன் ரூபா 1—0—0
போஸ்டேஜ் 0—4—0

விலாசம்: வி. எ. எஸ். பாணி,
சாவுகார் பேட்டை, மதராஸ்.

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

பக்திரசம் நிறைந்தது.

பிரகலாதன்.

பாகவத புராணத்தில் கூறப்படும் பிரகலாதன் கதையை அறியாத தமிழர் இல்லை. அது நாடகரூபமாக நவரஸாலங்காரங்களுடன் இனிய எளிய தெளிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே இனிய பாடல்கள் அமைந்துள்ளன. கம்பராமாயணம் பாகவதம் முதலிய நூல்களிலிருந்து அநேக மேற்கோள்கள் எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. நாவல் படிக்க விரும்பும் தற்கால ஜனங்களுக்கு நாவல்போலவும் நாடகத்தின் அலங்காரங்களை அறிந்து இன்புற விரும்புவோருக்கு நாடகமாகவும் இது அமைந்துள்ளது. இதன் விலை அணு 8. கேட்லாக் வேண்டியவர் ½ அணு தபால் லேபில் அனுப்பவேண்டும்.

தனபதி.

படிப்பவர் மனத்தைப் பரமானந்தத்தில் ஆழ்த்தும் பலவித் கற்பனாலங்காரக் கதை; இதில் தனபதி என்னும் அரசன் தன் வண்ணானை அரசனாக நியமிக்க, அவ் வண்ணான் அப்போதும் தன் புத்திபோகாமல், அரண்மனையை அவலமாக்குவது படிக்கப் படிக்க விடாநகைப்பை விளைவிக்கும்.

இதன் விலை அணு 2. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். தனிப் புத்தகம் வேண்டுவோர் 2½ அணு தபால் லேபில் அனுப்ப வேண்டும்.

அதிக பக்ஷமுள்ள நண்பர்கள் அனைவருக்கும் தெரிவிக்கத் தக்கது:—

நாவல் படிக்கவேண்டுமானால் இப்பேர்கொத்த நாவலையல்லவோ படிக்கவேண்டும். அது என்ன நாவல்? நமது ரங்கராஜு அவர்களால் எழுதிய நான்கு நாவல்கள்.

இராஜாம்பாள்	0 — 12 — 0
ஆனந்த கிருஷ்ணன்	0 — 12 — 0
சந்திரகாந்தா	0 — 12 — 0
மோஹனசுந்தரம்	0 — 12 — 0

பி. வி. கண்ணன் அண்டு கம்பெனி,

சிந்தாதிரிப்பேட்டை சென்னை.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

ஜீரண சம்பந்தமான தொந்தரவுகளை நீக்கி ஜீரண சக்தியை விருத்திசெய்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

ரத்த சுத்தி ரத்த விருத்திசெய்து தேக பலத்தைக் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

மூத்திர சம்பந்தமான பிணிகளை நீக்கி நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்துகின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

புத்தி திக்ஷணியத்தையும். மனோற்சாகத்தையுங் கொடுக்கின்றன.

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

சரீர சம்பந்தமான வியாதிகளை யெல்லாம் குணப்படுத்துகின்றன.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூ. 1.

வைத்தியசாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, 96, மவுண்ட்ரோட், மதராஸ்.

புதுவை — ஸைகோன் சின்னையா பிரஸ்.